GCI

# பாடம் 4
# சுவிசேஷ ஊழியம்

<u>முன்னுரை</u>:

நோக்கம்:

- சுவிசேஷ ஊழியத்தின் அர்த்தம் மற்றும் வேத அடிப்படைகளை அறிந்து கொள்ள
- சுவிசேஷ ஊழியத்தின் அடிப்படையான காரியங்களை குறித்து படிக்க
- சுவிசேஷ ஊழியத்தில் பவுல் மற்றும் இயேசுவின் வியூகங்களை குறித்து படிக்க

<u>பாடதிட்டம்:</u>

1. முன்னுரை

    அ. எது சுவிசேஷ ஊழியம் இல்லை?
    ஆ. சுவிசேஷ ஊழியம் என்றால் என்ன?
    இ. ஏன் விசுவாசிகள் சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபடுவதில்லை.

2. சுவிசேஷ ஊழியத்தின் இறையியல்

    அ. சுவிசேஷ ஊழியம் தேவனின் எண்ணம்.
    ஆ. சுவிசேஷ ஊழியமும் புதிய ஏற்பாடும்
    இ. சுவிசேஷ ஊழியத்தில் உள்ள முக்கியமான வார்த்தைகள்

3. சுவிசேஷ ஊழியத்தின் அடிப்படைகள்

    அ. சுவிசேஷ ஊழியத்தின் சாரம்
    ஆ. சுவிசேஷ ஊழியத்தில் உள்ளவருக்கான அடிப்படைத்தகுதிகள்

4. வாழ்க்கை முறை சுவிசேஷ ஊழியம்.

    அ. இயேசுவே சுவிசேஷ ஊழியத்திற்கான சிறந்த எடுத்துக்காட்டு.
    ஆ. சுவிசேஷ ஊழியத்திற்கான திறவுகோல்கள்
    இ. சுவிசேஷ ஊழியமும் சபையும்

GCI

# 1. முன்னுரை

சுவிசேஷ ஊழியம் என்று நினைக்கும் போது உங்கள் மனதில் என்ன தோன்றுகிறது?

பெரிய பெரிய பிரசங்கிகள்?

சுவிசேஷ ஊழியம் பெரிய பிரசங்கிகளுக்கு மட்டும் தானா? சாதாரண கிறிஸ்தவர்களுக்கு கிடையாதா?

### *அ. எது சுவிசேஷ ஊழியம் இல்லை?*

1. சபையின் நாற்கா- களை நிரப்புவது மட்டுமல்ல
2. பெரிய பிரசங்கி ஒருவர் பெரிய மேடையில் பேசுவது அல்ல
3. இது சிலுவை தரித்த ஆலயம் என்ற கட்டடத்தில் போதகர்கள் எனப்பட்டவர்கள் மட்டும் செய்யும் செயல் அல்ல.
4. இது சபையின் காலண்டரில் உள்ள நிகழ்ச்சிகளில் ஒன்று மட்டுமல்ல
5. இது வெறும் பேச்சு அல்லது வார்த்தைகள் மட்டுமல்ல

### *ஆ. சுவிசேஷ ஊழியம் என்றால் என்ன?*

1. 19ம் நூற்றாண்டின் புகழ்பெற்ற ஆங்கில பிரசங்கியாரும் சுவிஷேகருமான C.H. ஸ்பர்ஜன், இவ்வாறு சுவிசேஷ ஊழியத்தை விளக்குகிறார்:

ஒரு பிச்சைக்காரன் மற்றவனிடம் தனக்கு எங்கு அப்பம் கிடைத்தது என்று கூறுவதே சுவிசேஷ ஊழியமாகும்.

ஆம், இயேசுவே அந்த அப்பமாகும். நாம் கர்த்தர் நல்லவர் என்பதை ருசி பார்க்க வேண்டும். சங் 34:8

2. இங்கிலாந்தின் ஆர்ச் பிஷப் வில்- யம் டெம்பிள் கூறுகையில்...

... மனிதர்கள் தேவனிடத்தில் இயேசு மூலமாய் நம்பிக்கை வைக்கும் படிக்கும், அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டு சபையின் ஐக்கியத்தில் அவருக்கு ஊழியம் செய்யும் படிக்கும், இயேசு கிறிஸ்துவை பரிசுத்த ஆவியின் வல்லமையில் அவர்களுக்கு காட்டுவதே சுவிசேஷ ஊழியமாகும்.

அ. சுவிசேஷ ஊழியம் என்பது இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை சொல்வது ஆகும்.

ஆ. இதில் பரிசுத்த ஆவியானவரின் வேலை உள்ளது.

இ. இயேசுவை இரட்சகராய் ஏற்று கொள்ளுவதாகும்.

ஈ. ஒரு சபையில் அங்கத்தினராய் இணைவதாகும்.

உ. தேவனுக்கு ஊழியம் செய்வதாகும்.

***இ. ஏன் விசுவாசிகள் சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபடுவதில்லை?***

1. இது நம் வேலையில்லை, இதற்காகவே சம்பளம் வாங்குகிற போதகர்கள் மற்றும் சுவிசேஷகர்கள் வேலை என்று எண்ணுகிறார்கள்.

   2தீமோ 4:5

   நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று.

   ஆம் எல்லோரும் சுவிசேஷகராய் அழைக்கப்படவில்லை ஆனால் சாட்சிகளாய் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். (அப் 1:8)

2. விசுவாசிகளுக்கு அவர்கள் யாரை நம்புகிறார்கள், ஏன் நம்புகிறார்கள் என்ற தெளிவு இல்லை.

3. அவர்கள் பயத்தினால் நிறைந்திருக்கிறார்கள்.

## 2. சுவிசேஷ ஊழியத்தின் இறையியல்

***அ. சுவிசேஷ ஊழியம் தேவனின் மனதில் தோன்றிய எண்ணம்.***

1. ஆதி 3:9 — ஆதாம் நீ எங்கே இருக்கிறாய்?

   இரட்சிக்கும் தேவன் விழுந்து போன் மனிதர்களை தேடுகிறார்.

2. ஆதி 3:14-15 — இரட்சகர் வருவாரென்ற வாக்குத்தத்தம்.

   அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து: நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும் சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்;
   உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.

3. ஆதி 12:1-3 — ஆபிரகாமின் அழைப்பு. மேசியாவின் வித்தை ஆபிரகாமின் சந்ததியில் கொண்டுவரும் தேவனின் திட்டம்.

   கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ.

   நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.

   உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.

GCI

4. திரியேக தேவன் சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபட்டார். பிதா தன் குமாரனை நற்செய்தியுடன் அனுப்பினார். ஆவியானவர் சுவிசேஷ ஊழியத்தில் உதவி செய்கிறார்.

யோவான் 3:16

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

தீத்து 3:5

நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.

### ஆ. சுவிசேஷ ஊழியமும் புதிய ஏற்பாடும்

1. புதிய ஏற்பாட்டில் உள்ள நான்கு *சுவிசேஷங்கள்* கிரேக்க வார்த்தை இவாஞ்ச□யோன் ல் இருந்து வந்தது. இது ஆங்கில வார்த்தை இவாஞ்வ□சம் என்பதின் மூல வார்த்தையாகும். இவாஞ்ச□சம் என்பது சுவிசேஷ ஊழியம் என்பதின் ஆங்கில பதமாகும்.

2. பெந்தெகொஸ்தே நாள் சுவிசேஷ ஊழியத்தின் முக்கியமான நாளாகும். – 3000 பேர் ஒரே நாளில் இரட்சிக்கப்பட்டார்கள்

   அப் 2:41
   அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

   அப் 4:4 ல் இது 5000ஆக வளர்ந்து விட்டது

3. சுவிசேஷகனாகிய பி- ப்பு சமாரியர்களுக்கு சுவிசேஷம் கொண்டு சென்றான்.

   அ. அப் 8:4-8

   சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்.

   அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப்போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்.

   பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள்.

   அநேகரிலிருந்து அசுத்தஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள்.

   அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று.

   ஆ. அவன் எத்தியோப்பியனுக்கு சுவிசேஷம் அறிவித்தான். அப் 8:26-40. அப் 8:30

GCI

அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச்சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு: நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான்.

4. பேதுரு சுவிசேஷ ஊழியம் செய்தல். அப் 10:9-16

அப் 10:25

பேதுரு உள்ளே பிரவேசிக்கிறபொழுது, கொர்நேலியு அவனுக்கு எதிர்கொண்டுபோய், அவன் பாதத்தில் விழுந்து, பணிந்துகொண்டான்.

5. பவுலும் சுவிசேஷ ஊழியமும். அப் 13:1-3

அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபாவும், நீகர் என்னப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லுகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனேகூட வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும், தீர்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தார்கள்.

அவர்கள் கர்த்தருக்கு ஆராதனைசெய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம்பற்றினார்.

அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள்.

## இ. சுவிசேஷ ஊழியத்தில் உள்ள முக்கியமான வார்த்தைகள்

1. ஒப்புரவாக்குதல்: இருதிறத்தாரை சமாதனப்படுத்துதல்

2கொரி 5:18-19

இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்.

அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.

கொலோ 1:22

நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும்.

தேவனே சுவிசேஷத்தின் மூலம் ஏற்படுத்துகிறார்.

எபே 2:14-16

எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து,

GCI

சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி,

பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.

2. *பாவ மன்னிப்பு*

கொலோ 1:13-14

இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.

(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.

1யோவான் 1:9
நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

3. விடுதலை

யோவான் 8:32

சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.

யோவான் 8:36

ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்.

லூக் 4:18

கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்,

## 3. சுவிசேஷ ஊழியத்தின் அடிப்படைகள்

### *அ. சுவிசேஷ ஊழியத்தின் சாரம்*

1. சுவிசேஷ ஊழியம் அடிப்படையில் இரண்டு பகுதியை உள்ளடக்கியது

*அ. நற்செய்தியை அறிவிப்பது.*

✓ நாம் தெளிவாக அறிவிக்க வேண்டும். கொலோ 4:4

திருவசனம் செல்லும்படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள்.

GCI

- ✓ நாம் சுவிசேஷத்தின் அறிவுக்காய் ஜெபிக்க வேண்டும். 2கொரி 4:3-4

  எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால்,
  கெட்டுப்போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும்.
  தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான
  சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப்
  பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்
  அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.

ஆ. *நற்செய்தியை நம்ப வைத்து மனமாற்றத்தை ஏற்படுத்துவது. 2கொரி 5:11*

ஆகையால் கர்த்தருக்குப் பயப்படத்தக்கதென்று அறிந்து,
மனுஷருக்குப் புத்திசொல்லுகிறோம்; தேவனுக்கு முன்பாக
வெளியரங்கமாயிருக்கிறோம்; உங்கள் மனச்சாட்சிக்கும்
வெளியரங்கமாயிருக்கிறோம் என்று நம்புகிறேன்.

2. சுவிசேஷ ஊழியம் வேத வசன அடிப்படையில் இருக்க வேண்டும்.

அப் 8:26-35
பி- ப்பு வேத வசனத்தி- ருந்து எடுத்து போதித்தான்.

அப் 8:35
அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்.

3. நாம் ஒரு கேள்வியையோ அல்லது தலைப்பையோ மையமாக வைத்து சுவிசேஷத்தை சொல்லலாம். அப் 17:16-34

அப் 17:22

அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று: அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவதாபக்தியுள்ளவர்களென்று காண்கிறேன்.

4. நற்செய்தியில் இடம் பெறுபவை

கிறிஸ்தவத்தின் மையம் கிறிஸ்து. இது சில மத சட்டதிட்டங்களோ அல்லது தத்துவ ஞானமோ அல்ல. பவுல் சொல்கிறார்:

1கொரி 15:3-4

நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும்
என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது
பாவங்களுக்காக மரித்து,
அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில்
உயிர்த்தெழுந்து,

*அ. இயேசு கிறிஸ்து.*

1. அவர் முழு மனிதன். அவர் சோர்வடைந்து தாகமாயிருந்தார். யோவான் 4:6

GCI

அங்கே யாக்கோபுடைய கிணறு இருந்தது; இயேசு பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய் அந்தக் கிணற்றினருகே உட்கார்ந்தார்; அப்பொழுது ஏறக்குறைய ஆறாம்மணி வேளையாயிருந்தது.

2. அவர் முழு தேவன்.

பி- 2:6

அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,

*ஆ. மனிதனின் தேவை.*

1. எல்லோரும் பாவம் செய்தார்கள்.

ரோமர் 3:23
எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி,

2. பாவத்தின் சம்பளம்.

ரோமர் 6:23
பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.

*இ. தேவனின் உதவி*

ரோமர் 5:8
நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.

*ஈ. மனிதனின் பதிற் செயல்*

1. மனந்திரும்பு - அப் 2:38

2. பெற்றுக்கொள்

யோவான் 1:12

அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.

ரோமர் 10:9

என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

**ஆ. சுவிசேஷ ஊழியத்தில் உள்ளவருக்கான அடிப்படைத்தகுதிகள்**

1. வேதம் கர்த்தருடைய வார்த்தை என்ற ஆழமான நம்பிக்கை வேண்டும் 1தீமோ 3:16

GCI

2. அதிகமாக ஜெபிக்க வேண்டும்.

லூக் 18:1
சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்:

## 4. வாழக்கை முறை சுவிசேஷ ஊழியம்

கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவர்கல்லாதவர்க்கும் போதுவான காரியம் எதுவுமே இல்லையா?...

பொதுவான காரியங்கள்: அழுக்கான வீடு, பன்றியை சுத்தம் செய்வது, சேட்டை செய்யும் பிள்ளைகளுக்கு ஆகாரமளிப்பது.

சரியான சுவிசேஷ ஊழியம் என்பது வார்த்தை ஜாலம் அல்ல. பரிசுத்தமான சபையும் சந்தோஷமான வீடுமாகும்.

ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கை தான் சுவிசேஷ ஊழியத்தில் தேவன் பயன்படுத்தும் வல்லமையான கருவியாகும்.

கேள்வி: நீ ஒரு சந்தோஷமான கிறிஸ்தவனா?
நீ கிறிஸ்துவுக்காக பிரகாசிக்கிற வாழ்க்கை வாழ்கிறாயா?

### *அ. இயேசுவே சுவிசேஷ ஊழியத்திற்கான சிறந்த எடுத்துக்காட்டு*

1. நாம் கடவுளை அறியும்படி அவர் மனிதனானார்.

யோவான் 1:14
அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.

யோவான் 14:9
அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்?

இயேசு அன்பை பற்றியும் பரிசுத்தத்தை பற்றியும், மன்னிப்தை பற்றியும் பேசிக் கொண்டு மாத்திரம் இருக்கவில்லை. அவர் செய்து காட்டினார்.

யோவான் 1:14
அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்;

2. நாம் பாவிகளுக்கு இயேசுவை பிரதிப- க்க அவரை போல் மாற வேண்டும்.

பி- 1:27

GCI

நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக்குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்.

நமது வாழ்க்கை மேலும் மேலும் மறுரூபமடைந்து கிறிஸ்துவை பிரதிப- க்க வேண்டும்.

2கொரி 3:18
நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.

நாம் எவ்வுளவு வாதமிடுகிறோம் என்பதில் மக்களுக்கு கவலையில்லை. எவ்வளவு அவர்கள் மீது கவனம் செலுத்துகிறோம் என்றே பார்க்கிறார்கள்.

யோவான் 13:35
நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்.

அவிசுவாசிகள் வேதத்தை விட நமது வாழ்க்கையை பார்த்து படித்தே இயேசுவை ஏற்றுக்கொள்வார்கள்.

2கொரி 3:2
எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே.

### ஆ. சுவிசேஷ ஊழியத்திற்கான திறவுகோல்கள்

1. சுவிசேஷ ஊழியத்தில் பவு- ன் வியூகம் (1கொரி 9:19-23)

1கொரி 9:22
பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப்போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்.

பிறரை இரட்சிக்கும் சுவிசேஷ ஊழியத்தில் நாம் பிறரை போல மாற வேண்டும்.

அ. பவுல் நெகிழ்வுத்தன்மையுள்ளவராயிருந்தார்.

அவர் அநேக கட்டுபாடுகள் உள்ள யூதர்களிடமும் பழகினார். அதே நேரம் புறஜாதிகளிடமும் பழகினார். யோசித்து பாருங்கள் யூதருக்கும் மற்றவர்களுக்கும் சாப்பாட்டில் எவ்வுளவு வித்தியாசங்கள் இருந்திருக்கும்.

ஆ. பவுல் தன் வாழ்க்கையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டார். மற்றவர்களின் வாழ்க்கையிலும் அக்கறை கொண்டார்.

1தெச 2:8
நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம்.

GCI

2. சுவிசேஷ ஊழியத்தில் இயேசுவின் வியூகம். லுக் 19:1-9

அற்புதங்களைச் செய்வதற்கு முன்பதாக தேவைகளை கண்டுபிடிப்பது.

சகேயுவின் தேவையை இயேசு சந்தித்தார். ஆயக்காரனாகிய சகேயு சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டிருந்தான். இயேசு அவனிடத்தில் அன்பு காட்டினார். இயேசு அவன் வீட்டை விட்டு வரும் போது அவன் தன் சொத்தின் பாதியை ஏழைகளுக்கு கொடுக்க சம்மதித்திருந்தான்.

அ. மக்களின் தேவைகளை சந்தித்தார்.

1. நிக்கோதேமுவிடம் - நீ மறுபடியும் பிறக்க வேண்டும்.
2. சமாரிய பெண்ணிடம் — ஜீவத்தண்ணீர்
3. ஐசுவரியவானிடம் - நீ உனக்குண்டானவைகளை விற்று தரித்திரருக்கு கொடுத்து விட்டு என் பின்னே வா.
4. சகேயுவிடம் — இயேசு நீ உனக்குண்டானவைகளை விற்று தரித்திரருக்கு கொடுத்து விட்டு என் பின்னே வா, என்று சொல்லவில்லை. நான் இன்று உன் வீட்டிற்கு வருகிறேன் என்றே கூறினார்.

ஆ. இயேசு மக்களை ஊழியத்தில் உபயோகப்படுத்தினார். அவர்களுடன் நேரம் செலவழித்தார். மாற்கு 3:13-15

இ. ஊழியம்:

1. போதனை ஊழியம்:

இயேசு போதித்தார். யோவான் 8:31-32
ஆதிசபை போதிப்பதில் கவனம் செலுத்தியது. அப் 2:42
பவுல் போதித்தார். அப் 28: 30-31

2. சரீர தேவைக்கான ஊழியம்:

இயேசு பசியாயிருந்தவர்களுக்கு போஜனமளித்தார். மாற்கு 6:41; யாக் 2:16

3. அற்புதங்களின் ஊழியம்:

வியாதிப்பட்டவர்களை குணமாக்கி பிசாசுகளை துரத்தினார். அப் 10:38

4. மனநிலை ஊழியம்:

இயேசு சமாரியா பெண்ணுடன் பேசி அவளை இரட்சிப்புக்குள் நடத்தினார். யோவான் 4.

### இ. சுவிசேஷ ஊழியமும் சபையும்.

1. ஒரு போதகராக

அ. ஒரு போதகராக, கிடைக்கும் எல்ல வாய்ப்புகளையும் பயன்படுத்தி சுவிசேஷம் அறிவியுங்கள்.

எபே 5:16
நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.

நீங்கள் கீழ்க்காணும் தருணங்களை பயன்படுத்தி சுவசேஷம் அறிவிக்கலாம்.

1. ஞானஸ்நான ஆராதனை

2. குழந்தை பிரதிஷ்டை

3. திருமண ஆராதனை

4. அடக்க ஆராதனை

5. வியாதிப்பட்டவர்களை சந்திக்கச் செல்லும் போது

6. சபை விசுவாசிகளை சந்திக்கச் செல்லும் போது

7. குடும்ப முகாம் போன்ற சபையின் சிறப்பு நிகழ்ச்சிகளில்

ஆ. சுவிசேஷம் கலந்த வேத பாட ஆராதனைக் கூட்டங்கள்.

1. நான்கு சுவிசேஷங்களை குறித்த வேத பாடம்

2. வாழ்க்கையின் பொதுவான கேள்விகளை குறித்து விவாதிக்கலாம்.

- ✓ நம் மரணத்திற்கு பின் வாழ்வு உண்டா?
- ✓ நம் பாவ கர்மத்தை தொலைப்பது எப்படி?

இ. உங்கள் சபை அல்லது குழுவின் அங்கத்தினர்களை சுவிசேஷம் சொல்ல பழக்கவும்.

2தீமோ 2:2
அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி.

ஈ. கைப்பிரதிகளை வாங்கி வைத்து அங்கத்தினர்கள் முலம் விநியோகியுங்கள். யோவான் 20:31

85 சதவீதம் தென் அமெரிக்கா நாட்டினர் ஏதாவது புத்தகத்தின் மூலமாவது அல்லது கைப்பிரதியின் மூலமாவதுதான் இயேசுவை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இலக்கியத்தின் அநுகூலங்கள்:

- ✓ நிலையானது.



GCI

GCI

- ✓ தொடர்ந்து வைத்திருக்கப்படும்.
- ✓ பலரால் வாசிக்கப்படும்.
- ✓ நோக்கமுள்ளது.
- ✓ சிக்கனமானது.

உ. நற்கிரியைகள் செய்ய மக்களை ஊக்கப்படுத்துங்கள். யாக் 2:14-15

ஊ. இசையை சுவிசேஷம் அறிவிப்பதில் ஒரு கருவியாக பயன்படுத்துங்கள்.

2. சபையாக:

*அ. நாம் மாற்றங்களை கொண்டுவர தயங்கக் கூடாது.*

ஸ்தேவான் சுவிசேஷ ஊழியத்தில் வல்லமையுள்ளவனாயிருந்தான். அநேகர் ஆண்டவரை ஏற்றுக் கொண்டார்கள்.

1. அவன் கர்த்தர் ஒரு கட்டடத்துக்குட்பட்டவரல்ல என்று போதித்தான்.

2. அவன் நியாயபிரமாணத்திற்கு எதிராக போதித்தான். (அப் 6:13-14)

ஆனால் யூதர்கள் மாற்றத்தை விரும்பாதபடியால் கோபத்தில் கல்லெறிந்து கொன்றார்கள்.

சில நேரம் சபை மாற்றத்தை ஏற்காதபடியால் சுவிசேஷ வேலை கூட தடைபடுகிறது.

*ஆ. நாம் விசுவாசிகளை சுவிசேஷ வேலையில் ஈடுபடுத்த வேண்டும். கர்த்தருடைய வேலை போதகர்கள், பாஸ்டர்கள் என்பவர்களுக்குட்பட்டதல்ல.*

எபேசியர் 4:12

அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார்;

**<u>List of References</u>:**

Joseph C. Aldrich, *Lifestyle Evangelism* (Portland, Oregon: Multnomah Press, 1981).

Lewis A. Drummond, *The Word of the Cross* (Tennessee: Broadman Press, 1992).

Michael Green, *Evangelism Through the Local Church* (Nashville, Tennessee: Oliver-Nelson Books, 1992).

Ralph G. Turnbull, *Evangelism Now* (Michigan: Baker Book House, 1972).